

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.11.2024) தலைமைச் செயலகத்தில், தெற்கு வங்கக் கடல் பகுதியில், காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிக்கையை தொடர்ந்து கனமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திருமதி பெ. அமுதா, துறைச் செயலாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் காணொலிக் காட்சி வாயிலாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கனமழை எச்சரிக்கை: காணொலி மூலம்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - 6 மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு!

## நிவாரண முகாம்கள் அமைத்து தயார் நிலையில் இருக்க உத்தரவு!

சென்னை, நவ.27-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து கனமழையினை எதிர்கொள்ள டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் காணொலிக் காட்சி வாயிலாக மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து ஆயத்த நடவடிக்கைகளை இந்திய ஆட்சிப் பணி நிலையிலான மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

**நடவடிக்கைகளை கேட்டறிந்தார்!**

இக்கூட்டத்தின்போது, முதலமைச்சர் அவர்கள், அதிகனமழை எச்சரிக்கை வரப்பெற்ற மாவட்டங்களான மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த மாவட்டங்களில் போதுமான நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளதோடு, பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளுக்கென பல்துறை மண்டலக் குழுக்கள், மருத்துவக் குழுக்கள் மற்றும் தேவை யான உபகரணங்கள் கண்டறியப்பட்டு தயார் நிலையில் உள்ளன என்று இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக, அதிக மழைபொழிவினை பெற்றுவரும் நாகப்பட்டினம் மாவட்டத்தில், 125 JCB இயந்திரங்கள், 75 படகுகள், 250 ஜெனரேட்டர்கள், 281 மர அறுப்பான்கள்; கடலூர் மாவட்டத்தில் 242 JCB இயந்திரங்கள், 51 படகுகள், 28 ஜெனரேட்டர்கள், 104 மர அறுப்பான்கள், 58 மோட்டார் பம்புகள்; மயிலாடுதுறை மாவட்டத்தில், 85 JCB இயந்திரங்கள், 70 படகுகள், 164 ஜெனரேட்டர்கள், 57 மர அறுப்பான்கள், 34 மோட்டார் பம்புகள்; திருவாரூர் மாவட்டத்தில் 125 JCB இயந்திரங்கள், 18 படகுகள், 142 ஜெனரேட்டர்கள், 73 மர அறுப்பான்கள், 18 மோட்டார் பம்புகள்; தஞ்சாவூர் மாவட்டத்தில் 59 JCB இயந்திரங்கள், 29 படகுகள், 69 ஜெனரேட்டர்கள், 711 மர அறுப்பான்கள், 42 மோட்டார் பம்புகள் ஆகியவை தயார் நிலையில் உள்ளன என்று மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்தனர்.

**மீட்பு நடவடிக்கைகள் தயார்!**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி முன்னெச்சரிக்கை யாக திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு தலா ஒரு தேசிய பேரிடர் மீட்பு படை குழுவும், மாநில பேரிடர் மீட்புப் படை குழுவும் விரைந்துள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 2 தேசிய பேரிடர் மீட்புப் படை குழுவும் விரைந்துள்ளது. மேலும், மேற்படி மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு முதல்நிலை மீட்பாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

ஏற்கெனவே, மீனவர்கள் கடலுக்கு செல்வதை தடுக்க அறிவுரை வழங்கப்பட்டு பெரும்பான்மை படகுகள் கரை திரும்பியுள்ளன. ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள படகுகள் அருகில் உள்ள துறைமுகங்களுக்கு செல்ல நவீன தொலைத்தொடர்பு சாதனங்களுடன் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள் பல்துறை அலுவலர்களுடன் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் நிவாரண முகாம்களை அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், கனமழையின் போது பொதுமக்களை தாழ்வான பகுதிகளிலிருந்து முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு அழைத்து வரவேண்டும் என்றும், வெள்ளநீர் தேங்கி பயிர்கள் சேதமடையாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், மின்சார வசதி தடையின்றி கிடைத்திட தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**விழுப்புரம் மாவட்ட கள ஆய்வு ஒத்திவைப்பு!**

விழுப்புரம் மாவட்டத்தில் கனமழை பெய்யக்கூடும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து, 28.11.2024 மற்றும் 29.11.2024 ஆகிய நாட்களில் விழுப்புரத்தில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறவிருந்த அரசு நிகழ்ச்சி மற்றும் கள ஆய்வு கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது. இதற்கான தேதிகள் விரைவில் அறிவிக்கப்படும்.

இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவன மேலாண்மை இயக்குநர் நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன், எம்.பி. முன்னிலை!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் 21 இணைகளுக்கு சீர்வரிசையுடன் கூடிய திருமணம்!

## பா.ஜெகதீஷ் தலைமையில் அமைச்சர் எ.வ.வேலு - எஸ்.ஜோயல் நடத்தி வைக்கின்றனர்!

சென்னை, நவ.27-

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு - 21 இணையர்களுக்கு சீர்வரிசை யுடன் கூடிய திருமணத்தை -பொதுப்பணித்துறை அமைச் சர் எ.வ.வேலு மற்றும் கழக இளைஞரணி துணைச் செய லாளர் எஸ்.ஜோயல் ஆகியோர் திருமணத்தை நடத்தி வைத்து சிறப்பிக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்2, இணைகிறது இரு இதயம்! மலர்கிறது புது உதயம்! எனும் தலைப்பில் திருமண விழா 28.11.2024, புதன் கிழமை அன்று காலை 8.00 மணியளவில், சென்னை, பாரிமுனை, ராஜா அண்ணாமலைமன்றத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண விழாவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா. ஜெகதீஷ் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன், எம்.பி, எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், எம்.விஜயகுமார், ப.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி, என். பி.எம்.சேக் அப்துல்லா, எம். இப்ராஹிம்கனி, இரா.கலைச் செல்வி, பா.ஜெகதீஷ், எல்.சம் பத்குமார், பி.விஜயகுமார், பா.பிரதீப்குமார், எம்.வினாயகம், வெ.பரிமளம் எம்.சி, ராஜேஷ்ஜெயின் எம்.சி, எல். நவின் எம்.சி முன்னிலை வகிக் கின்றனர்.

மே.ஜனார்தனன், கே.ஆர். அபரஞ்சி, மா.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி. சந்தான லட்சமி, சி.ப.ஜெயராமன், துறைமுகம் மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: மா. ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை. துறைமுகம் கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: த.கதிரவன்(எ) ராஜா, எம்.பரத்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இத் திருமண விழாவில் 21 இணையர்களுக்கு சீர்வரிசை யுடன் கூடிய திரும ணத்தை - பொதுப்பணித்துறை அமைச் சர் எ.வ.வேலு, அவர்கள் மற் றும் கழக இளைஞரணி துணைச்செயலாளர் திரு. எஸ்.ஜோயல் அவர்கள் திருமணத்தை நடத்தி வைக்கின் றனர்.

மேலும் இத்திருமண விழா வில், மேயர் பிரியாராஜன், இரா.நரேந்திரன், தமிழன் பிரசன்னா, பி. எம். யாழினி மாநில நிர்வாகிகள்: கே. சந்துரு, பி. கே. மூர்த்தி, கே.எஸ்.எம். நாதன், தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ். மணிமுடி, வே. உமாகாந்த் பரிதிஇளம்சுருதி,

மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், மண்டலகுழுத் தலைவர்கள்நியமன குழு உறுப்பினர்கள்: கூ.பீ. ஜெயின், சரிதாமகேஷ்குமார், சொ.வேலு எம்.சி, டாக்டர். ஜி.சாந்தகுமாரி. பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப் .வ. முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக் கண்ணு. வி. சுதாகர். பொதுக் குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி. ஜெ. துளசிங்கம், பி.உதயசங்கர் ரமேஷ்(எ) நிலகண்டன், டி.வி.செம்மொழி. சாவித்திரி வீரராகவன் டாக்டர் ஏ.பி.பூர்ணிமா அ.நிர்மலாதேவி, மாட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: டி. லோ கேஷ், ஜெ.பாலமுருகன், க.வினோத், ஜி.ஜெ. பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, வானவில்விஜய், நா. துலுக்கானம், எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், சுதா தீனதயாளன், ராஜேஷ்வரி ஸ்ரீதர், துரைகண்ணன், எம். பெரோஸ்கான், ஜி.வி. நாகவள்ளி, மா.அசோக்குமார், கு. கிருஷ்ண மூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம் ஆர்.ஸ்.சித்திக் ஆகியோர் சிறப்பிக்கின்ற னர்.

வட்ட கழக செயலாளர்கள் டி.சதீஷ்குமார், வே. பா.பிரபாகரன் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**கட்டடத்துறை**

க.து.ந.க.எண்.பி1 / 2751 / 2024

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**Repairs to Leaky Terrace and Other Improvement works to Zonal Office Building at CTH Road in Div - 85, Zone - 07.**

**பணியின் மதிப்பு ரூ.57.00 இலட்சம்**

**முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பு தொகையில் 1%**

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **17.12.2024 அன்று பிற்பகல் 3.00 PM மணி வரை**

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **18.12.2024 அன்று பிற்பகல் 3.00 PM மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 5175 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**


# நீடூழி நீடூழி நெடும்புகழில் வாழ்க!



உருக்கியபொன் போன்றெழுந்தான்
ஒளிப்பரிதி!… இருள்
ஓட்டவந்தான்! தீட்டவந்தான்
வெளிச்சவிதி!
திருக்குவளை வழியில்வந்தத்
தமிழ்க்குருதி!… இளந்
திராவிடர்க்குத் தலைமைதாங்கும்
உதயநிதி!

சேப்பாக்கம் என்பதொரு
சிறுபகுதி!… எட்டுத்
திசைகளுமே தமிழ்நாட்டில்
இவன்தொகுதி!
வாய்ப்பாக நாடு,மொழி
இனம்கருதி… புது
வரலாறு படைத்திடுவான்
இதுஉறுதி!

இனிஒரு புதுவிதி எழுதவந்தான்!
இளைஞர்கள் இதயங்கள் குளிரவந்தான்!
இனிமையில் கனிவுடன் பழகவந்தான்!
எளியவர் மனங்களைக் கவரவந்தான்!

எடுபிடி அடிமைகள் நடுங்கவந்தான்!
எதிர்வரும் பகைவர்கள் ஒடுங்கவந்தான்!
தடைகளும் உடைபட முழங்கவந்தான்!
தமிழின விடியலை வழங்கவந்தான்!

இறுகிய விலங்குகள் உடைக்கவந்தான்!
எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்கவந்தான்!
வறியவர் துயரங்கள் துடைக்கவந்தான்!
வளமிகு தமிழகம் படைக்கவந்தான்!

களத்தினில் உரிமையை நாட்டவந்தான்!
கழகம்என் உயிர்எனக் காட்டவந்தான்!
“தளபதி” பெருமையைக் கூட்டவந்தான்!
தாய்மொழி உணர்வை ஊட்டவந்தான்!

இருவண்ணக் கொடிகளை ஏற்றவந்தான்!
எது?நம் இலக்கெனச் சாற்றவந்தான்!
அரசியல் பணிகளை ஆற்றவந்தான்!
“ஆரிய மாயை”யை மாற்றவந்தான்!

கனவுகள் நனவாய் ஆக்கவந்தான்!
காலத்தின் கொடைகளை மீட்கவந்தான்!
சனாதன இழிவைப் போக்கவந்தான்!
“சமூக நீதி”யைக் காக்கவந்தான்!

அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
“அன்பகத்தை” வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்,எங்கள் “தளபதி”யின்
கொள்கைமகன் வாழ்க!

ஆரியத்தை வேரறுக்கும்
சேரன்இவன் வாழ்க!
அழகுதமிழ்ப் பாண்டியனாம்
மாறன்இவன் வாழ்க!
தீரம்கொண்டு தினவெடுக்கும்
வீரன்இவன் வாழ்க!
“திருக்குவளைச் சோழனுக்கு”ப்
பேரன்இவன் வாழ்க!

இரக்கத்தில் அருட்குணத்தின்
எல்லைஇவன் வாழ்க!
இனப்பகைவர் சொப்பனத்தில்
தொல்லைஇவன் வாழ்க!
சிரிக்கின்ற பூஞ்சிரிப்பில்
முல்லைஇவன் வாழ்க!
சேப்பாக்கம் தொகுதி,செல்லப்
பிள்ளைஇவன் வாழ்க!

இலட்சியத்தில் உறுதிகொண்ட
இனமறவர் வாழ்க!
எட்டுக்கோடித் தமிழர்களின்
துணைமுதல்வர் வாழ்க!
மலைச்சிகரம் போலுயர்ந்த
நெடும்புகழில் வாழ்க!
வாழ்க!வருந் தலைமுறையின்
இளந்தலைவர் வாழ்க!



… கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் நேற்று (26.11.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தெற்கு வங்கக் கடல் பகுதியில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து கனமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் வ. மோகனச்சந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.